பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 06 செவ்வாய்க்கிழமை (23.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 327

# தரைவழி, வான் வழிகளால் அ'புரம் விமானத் தளம் மீது புலிகள் இருமுனைத் தாக்குதல்!

அனுராதபுரம்,ஒக்ரோபர் 23

அனுராதபுரத்திலுள்ள இலங்கை விமானப்படையினரின் தளம் மீது நேற்று அதிகாலை தமிழீழ விடுதலைப் புலிகள் பெரும் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

விடிகாலை 3.30 மணியளவில் விமானப்படைத்தளத்தின் உள்ளே புலிகளின் கரும்புலிகள் அணி ஒன்று ஊடுருவித் தாக்குதல் நடத்த, அந்த அணிக்கு ஆதரவாக அதிகாலை 4.30 மணியளவில் புலிகளின் இரண்டு விமானங்கள் பறந்துவந்து விமானப் படைத்தளம் மீது குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது தரைப்படை, வான்படை என்பவற்றை ஒரே நேரத்தில் பயன்டுத்தி நடத்தியிருக்கின்ற முதலாவது தாக்குதல் இதுவாகும்.

குறித்த விமானத்தளத்தில் தரித்துநின்ற 5 விமானங்களும் 3 ஹெலிக் கொப்டர்களும் இந்த இருமுனைத் தாக்குதலில் அழிக்கப்பட்டுவிட்டன என்று விடுதலைப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இரண்டு எம்.ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர்களும் பயிற்சி விமானம் ஒன்றுமே அழிக்கப்பட்டன என்று விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

அதிகாலை முதல் விமானத்தளப் பகுதியில் பெரும் வெடியோசைகள் கேட்ட வண்ணம் இருந்தன. தாக்குதல் தொடங்கியதும் அநுராதபுரம் எங்குமே மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது. அதிகாலை தொடங்கிய தாக்குதல் காலை சுமார் 9 மணிவரை தொடர்ந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

இருள் சூழ்ந்த வேளையில் திடீரெனக் கேட்ட வெடிச்சத்தங்களால் அந்தப் பிரதேசம் முழுவதுமே அதிர்ந்தது. மக்கள் என்ன நடக்கிறது என்று தெரியாமல் பீதியில் உறைந்தனர்.

தாக்குதலை அடுத்து அனுராதபுரம் மாவட்டம் முழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, தேடுதல் நடத்தப்பட்டது. மக்கள் எவரும் வீடுகளை விட்டு வெளியே வராமல் வீடுகளுக்குள் முடங்கினர். மாவட்டம் முழுவதுமே சனநடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் கிடந்தது.

## 5 விமானங்கள், 3 ஹெலிகள் அழிப்பு!

### 21 கரும்புலிகள் வீரச்சாவு - புலிகள் அறிவிப்பு

அனுராதபுரம் விமானப்படைத் தளம் மீது நேற்று அதிகாலை தமது சிறப்புக் கரும்புலிகள் அணியொன்று ஊடுருவி நடத்திய தாக்குதலில் 5 விமானங்களும் 3 ஹெலிகொப்டர்களும் அழிக்கப்பட்டுள்ளன என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

இந்தத் தாக்குதலில் தமது தரப்பில் 3 பெண் கரும்புலிகள் உட்பட 21 கரும்புலிகள் அடங்கிய விசேட அணி ஒன்றே தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்துள்ள புலிகள், அந்த 21 கரும்புலிகளும் நேற்றைய வெற்றிகரத் தாக்குதலில் வீரச்சாவடைந்துவிட்டனர் எனவும் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவையாவன:-

திங்கட்கிழமை அதிகாலை 3.20 மணியளவில் 21 பேர் கொண்ட சிறப்புக் கரும்புலி அணியினர் அனுராத புரம் ஸ்ரீலங்கா வான்படைத் தளத்திற்குள் உள்நுழைந்து தாக்குதல் தொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து அதிகாலை 4.30 மணியளவில் (08ஆம் பக்கம் பார்க்க)

## 4 வானூர்திகளே இழப்பு; 14 படையினர் பலி!

### 20 இராணுவத்தினர் காயம் - அரசு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 23

புலிகளின் நேற்றைய தாக்குதலின்போது விமானப்படையினருக்குச் சொந்தமான இரண்டு எம்.ஐ.24 ரக ஹெலிக்கொப்டர்களும் ஒரு பயிற்சி விமானமும் மாத்திரமே அழிக்கப்பட்டிருப்பதாக அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மொத்தமாக எட்டு விமானங்களைத் தாங்கள் அழித்துவிட்டனர் எனப் புலிகள் அறிவித்திருப்பதை அடியோடு மறுத்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, புலிகளின் தாக்குதலின்போது இரண்டு ஹெலிகொப்டர்களும் ஒரு பயிற்சி விமானமும் இயந்திரக் கோளாறினால் ஒரு ஹெலிகொப்டருமாக மொத்தம் நான்கு வான் கலங்களையே தாங்கள் நேற்று இழந்திருக்கின்றனர் என்று கூறினார்.

சம்பவத்தில் சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட 9 விமானப்படையினர் பலியாகினர் என்றும் 20 பேர் படுகாயங்களுடன் அனுராத்புர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர் என்றும் அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

''விமானப்படைத்தளத்துக்குள் அதிகாலை 3.10 மணியளவில் ஊடுருவிய புலிகளின் குழுவொன்று அங்கு தாக்குதலைத் தொடுத்தது. (08ஆம் பக்கம் பார்க்க)

## துரத்திய ஹெலி வீழ்ந்தது!

அனுராதபுரம், ஒக். 23

அநுராதபுரம் விமானப்படைத்தளம் மீது நேற்று அதிகாலை குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்திவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த புலிகளின் விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதற்காக வவுனியாவிலிருந்து மேலெழுந்து துரத்திச் சென்ற 'பெல் 212' ரக ஹெலிக்கொப்டர் ஒன்று மிகிந்தலையில் வீழ்ந்து நொறுங்கியது.

இதன்போது குறித்த ஹெலியில் இருந்த 4 விமானப்படையினரும் உயிரிழந்தனர்.

வீசறட்ட சில்வா, அமிலமுர்தி, எஸ்.ஏ.பி. குணவர்த்தன மற்றும் கோப்ரல் பிரதீப்குமார ஆகிய விமானப்படையினரே இதில் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மிகிந்தலைப் பகுதியில் (08ஆம் பக்கம் பார்க்க)

மிஹிந்தலைப் பகுதியில் விழுந்து நொருங்கிய ஹெலியின் பாகங்கள்



## அதிர்ச்சிகள் தொடரும்!

கிளிநொச்சி, ஒக். 23

''எதிர்காலத்திலும் படையினருக்கும் அரசுத் தரப்புக்கும் அதிர்ச்சிகள் காத்திருக்கின்றன.''

இப்படித்தெரிவித்திருக்கிறார் விடுதலைப்புலிகளின்படைத் துறைப் பேச்சாளர் இராசையா இளந்திரையன்.

நேற்றைய தாக்குதல் தொடர்பாக என்ன கூறுகிறீர்கள்? இனிமேலும் இதுபோன்ற தாக்குதல்கள் தொடருமா என்று இளந்திரையனிடம் கேட்டபோது, ''அதிர்ச்சி தொடரும்'' என்று சூசகமாகத் தெரிவித்தார்.

''கடந்த 87 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கரும்புலிகள் நடத்திய பாரிய தாக்குதல் இது. (நேற்றைய தாக்குதல்). இவ்வாறான தாக்குதல்கள் தொடரும் என்பதை மறுப்பதற்கில்லை. தமிழ் மக்கள் மீது ஈவு இரக்கமற்ற (08ஆம் பக்கம் பார்க்க)

## தலைநகர் கொழும்பில் மின் விநியோகம் துண்டிப்பு

கொழும்பு, ஒக். 23

அநுராதபுரம் விமானத் தளம்மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தியபோது கொழும்பில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு தலைநகர் இருளில் மூழ்கியது.

அங்கு இடம்பெறும் விடுதலைப் புலிகளின் வான் தாக்குதல் கொழும்பிலும் நடக்கலாம் என்ற அச்சம் காரணமாகவே மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது என்று கூறப்பட்டது. (1)

## 'எல்லாளன்' நடவடிக்கை என்று புலிகள் பெயர்சூட்டல்

கொழும்பு, ஒக். 23

அனுராதபுர வான்படைத் தளம் மீதான நேற்றைய தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் 'எல்லாளன்' நடவடிக்கை என பெயர் சூட்டியுள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவிக்கையில்-

''தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தரைப்படையினரும் வான்படையினரும் இணைந்து நடத்திய இத் தாக்குதலுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் 'எல்லாளன்' நடவடிக்கை எனப்பெயர் சூட்டியுள்ளார்.

''அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சோழமன்னன் எல்லாளனைக் குறியீடு செய்யும் வகையிலேயே இத் தாக்குதலுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் 'எல்லாளன்' நடவடிக்கை எனப் பெயர் சூட்டினார்'' - என்று கூறினார். (சி)

## அநுராதபுர மாவட்டத்தில் இயல்பு நிலை பாதிப்பு

அநுராதபுரம், ஒக். 23

அநுராதபுரம் விமானப்படைத் தளம் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து விமான நிலையத்தைச் சூழவுள்ள மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

அத்துடன் அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களின் பல வீடுகளும் சேதமடைந்துள்ளன.

வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள் எவையும் நேற்றுத் திறக்கப்படவில்லை. நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது.

ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னரும் கூட வீதிகளில் மக்கள் நடமாடவில்லை. இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அநுராதபுரம் ஊடான வெளிமாவட்டங்களுக்கான போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டிருந்தன.(அ-1)

மேலும் செய்திகள் படங்கள் 7ஆம், 8ஆம் பக்கங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தாக்குதல் குறித்து ஜே.வி.பி. சபையில் இன்று அறிக்கை

கொழும்பு, ஒக். 23

நேற்றைய அனுராதபுரத் தாக்குதல் தொடர்பாக ஜே.வி.பி. இன்று நாடாளுமன்றில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளது.

நாடாளுமன்றின் இன்றைய பிரதான நடவடிக்கைகளான மனுத்தாக்கல் மற்றும் கேள்வி - பதில் ஆகியவற்றைத் தொடர்ந்து ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ இந்த அறிக்கையை சபையில் வெளியிடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த மூன்று நாள்களாக இடம்பெற்ற பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐரோப்பாவைச் சேர்ந்த பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர் ஜெராட் சாலியண்ட் புலிகளைத் தோற்கடிக்க முடியாது என்று கூறிய கருத்துக்கு எதிராகவும் ஜே.வி.பி. நாடாளுமன்றில் அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளது.

இந்த அறிக்கையை இன்று அல்லது நாளை வெளியிட எதிர்பார்த்திருப்பதாக ஜே.வி.பி. வட்டாரம் நேற்றுத் தெரிவித்தது.

நவம்பர் மாதம் 7 ஆம் திகதி 2008 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு தொடர்ந்து ஒரு மாதத்திற்கு அது மீதான விவாதம் இடம்பெறவிருப்பதால் நாடாளுமன்ற சபை நடவடிக்கைகள் இன்றும் நாளையும் மாத்திரமே இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

## தரம் 4 மாணவருக்கு பொதுப் பரீட்சை

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் தரம் 4 மாணவர்களுக்கான பொதுப் பரீட்சை இன்று நடைபெற உள்ளது.

வினாத்தாள்களை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று பரீட்சையை நடத்துமாறு பாடசாலை அதிபர்களிடம் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (203)

# யாழ். விவசாய நுகர்ச்சிச் சங்க தலைவர் வெட்டிக் கொலை!

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரும், கைதடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவருமான சின்னப்பிள்ளை சுப்பிரமணியம் (வயது - 74) வெட்டிக்கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

கைதடி வடக்கு, ஆச்சிரமத்துக்கு முன்னால் இவரது சடலம் நேற்றுக் காலை வெட்டுக்காயங்களுடன் காணப்பட்டது.

கைதடி தென்கிழக்கில் உள்ள இவரது வீட்டுக்கு நேற்று நள்ளிரவு 12 மணியளவில் சென்ற இனந்தெரியாதோர் அவரைப் பெயர் சொல்லி அழைத்தனர். எனினும் வீட்டுக்கு வெளியே எவரும் வெளிவரவில்லை. ஆத்திரமடைந்த அவர்கள் கேற்றையும் வீட்டின் கதவையும் உடைத்து உள்ளே நுழைந்து சபைத் தலைவரைப் பலவந்தமாகக் கூட்டிச் சென்றனர் எனவும் பின்னர் நேற்றுக் காலை அவரது வீட்டில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் வெட்டுக்காயங்களுடன் அவர் சடலம் காணப்பட்டதாகத் தெரியவருகிறது.

பின்னர், சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. (அ-78-51-288-207)

## கலைக்கண்காட்சி வெள்ளிவரை நீடிப்பு

மருதனார் மடத்தில் இயங்கும் யாழ். பல்கலைக் கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் பட்டதாரி பயிலுநர் மாணவர்களால் நடத்தப்பட்டு வரும் ''வர்ணங்களின் மொழிகள்'' கலைக் கண் காட்சி மேலும் இரண்டு நாள்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நாளை புதன் கிழமையுடன் முடிவடைய இருந்த இக்கண்காட்சி பாடசாலை அதிபர்கள் மற்றும் மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இரு நாள் களுக்கு நீடிக்கப் பட்டுள்ளதாக அறி விக்கப் பட்டுள்ளது. அதன் படி எதிர்வரும் வெள்ளிக் கிழமைவரை கண்காட்சி இடம் பெறும். (1-203)

## கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

நாவலரின் 128ஆவது குருபூசை தினத்தை ஒட்டி சைவ பரிபாலன சபை நடத்தும் பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றன.

பேச்சுப்போட்டி காலை 9 மணிக்கும், கட்டுரைப் போட்டி முற்பகல் 10மணிக்கும் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

# வெளிநாட்டவரை இன்முகத்துடன் குடியேற்றும் சிறந்த நாடாக சுவீடன்

லண்டன், ஒக்.23

எந்தக் கட்டுப்பாடும் விதிக்காமல், இன்முகத்துடன் வெளிநாட்டவரை, குடியேற அனுமதிக்கும் நாடுகள் வரிசையில், சுவீடன் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. பிரிட்டனுக்கு ஐந்தாவது இடம் கிடைத்துள்ளது.


ஐரோப்பிய நாடுகள் உட்பட 28 நாடுகளில், கருத்துக்கணிப்பு எடுத்ததில், இது தெரியவந்துள்ளது. கருத்துக்கணிப்பில் தெரியவந்த தகவல்கள் சில:-

'வெளிநாட்டவரை, எந்தவித கெடுபிடியும் இல்லாமல், குடியேற அனுமதிக்கும் நாடுகள் வரிசையில் முதலில் உள்ளது சுவீடன். அடுத்து, போர்த்துக்கல், கனடா, பெல்ஜியம் ஆகியவை உள்ளன. ஐந்தாவது இடத்தை, அயர்லாந்துடன், பிரிட்டன் பகிர்ந்து கொள்கிறது. இந்த ஆறு நாடுகளிலும், இரட்டைக் குடியுரிமை வசதி உள்ளது. இந்த நாடுகளில் குடியேறும் வெளிநாட்டவர், தங்கள் சொந்த நாட்டுக் குடியுரிமையையும் வைத்துக் கொள்ளலாம்.

ஐரோப்பிய யூனியன் அமைப்பில் உள்ள 25 நாடுகள், அந்த அமைப்பில் இல்லாத நோர்வே, சுவிற்ஸர்லாந்து, கனடாவில் இந்தக் கருத்துக்கணிப்பு எடுக்கப்பட்டது. இந்த நாடுகளில், இன வெறித்தனம் இல்லை. எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இந்த நாடுகளில் குடியேற அனுமதிக்கப்படுகின்றனர். பிரிட்டனில் குடியேறியுள்ள வெளிநாட்டவர் 34 லட்சம் பேர். மொத்த மக்கள் தொகையில், 18 பேரில் ஒருவர் வெளிநாட்டவர் ஆவார்.

- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கண்ணீர் அஞ்சலி



## தெ. மே. ப. நோ. கூ. சங்கத்தின் தலைவர்

## சின்னப்பிள்ளை சுப்பிரமணியம்

*எமது சங்கத்தில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தலைவராக இருந்து எம்மை எல்லாம் வழி நடத்திய அன்னாரது அகாலமரணச் செய்தியினை கேள்வியுற்று பேரதிர்ச்சியடைந்துள்ளோம்.*

*அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
தெ. மே. ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.

(67254)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இளையதம்பி நாகரெத்தினம்



வண்ணார்பண்ணை, கேசாவில் வீதி, இல.30 ஐ வசிப்பிடமாகக் கொண்ட திருமதி இளையதம்பி நாகரெத்தினம் 19.10.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற இளையதம்பியின் மனைவியும், தையல்நாயகி, மாசிலாமணி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும், நித்தியானந்தன், வனஜா, தாயாநிதி, அருள்நேசன், சாந்தரூபி, உதயகுமாரி, இளங்கோ, நித்தியரதி ஆகியோரின் தாயும் பாலகிருஷ்ணன் நித்தியானந்தன், இராஜேஸ்வரி, நித்தியானந்தன், உதயகுமார், இந்திரா, சிவநேசன், கல்பனா ஆகியோரின் மாமியும், ஜெயகௌரி, தவேந்திரராஜா, ஜெயக்குமார், ஜெயராஜ் (அமரர்), ஜெசிந்தா (அமரர்), வாகீசன், சுகன்ஜா, ராகுலன், மயூரா, மகிதா, அருண், ஆதித்தன், நிசாந்தன், நிரோசன், நிகல்ஜா, நிருபன், தர்சனா, லக்சனா, சபேசன், கெங்கேசன், ஆதவன், அபிநயா, ஆரணி, அபினேஸ் ஆகியோரின் பாட்டியும், அனோஜா, பானுஜா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2007) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் பூதவுடல், தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திதிற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 30, கேசாவில் வீதி,*
*வண்ணார்பண்ணை.* (67253)

தகவல்
பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

## திருமதி குலவீரசிங்கம் பாக்கியலட்சுமி



சுதுமலை வடக்கு, ஈஞ்சடி வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குலவீரசிங்கம் பாக்கியலட்சுமி 19.10.2007 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குலவீரசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கணேசு - பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் (அல்வாய்) காலஞ்சென்ற நடராசா - பாருவதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் தேவராசா, தவராசா, செந்தில்நாதன் (பபா) ஆகியோரின் சகோதரியும், குலராஜன் (டோகா), குலரஞ்சனராணி (ஜோர்மனி), குலநிசந்தன் (டோகா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகிர்தா, ரவீந்திரன் (ஜோர்மனி), அஜந்தா ஆகியோரின் மாமியும் சியாந்தன், மதுஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (24.10.2007) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஈஞ்சடி வைரவர் கோயிலடி,**
**சுதுமலை வடக்கு, மானிப்பாய்.** (67252)

*தகவல்:*
ந.குலவீரசிங்கம்
(கணவர்).

# கண்ணீர்க் காணிக்கை

'லயஞான சுரபி' 'லயஞானமணி'

## கந்தசாமி நித்தியானந்தன்

(பிரபல தவில் வித்துவான்)



நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்துவிட்ட உன் நினைவுகள்
இனியவராய் வாழ்ந்து
எம்மை விட்டு பிரிந்தாயோ?
நினைவிழக்க முடியாமல் நாம்
நீந்துகின்றோம் கண்ணீர்க் கடலில்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இணுவில். (சி-54093) நாதஸ்வர — தவில் இளங்கலைஞர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருதனார்மடத்தில் அமைந்துள்ள நுண்கலைப் பீடவளாகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் மாணவர்களினால் நடத்தப்படும் ஓவியம், சிற்பம் மற்றும் புகைப்படக் கண்காட்சியில்-

இயற்கையையும் பழைமையையும் வெளிப்படுத்தும் வகையில் பிளா ஏந்தி மது அருந்துபவரின் சிற்பம் மற்றும் வாழ்வியலுக்காக சிங்கம் பலம் குன்றிய மிருகத்தை அழிப்பது போன்ற சிற்பம் என்பன கற்கள் மற்றும் சிமெந்து கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

(படங்கள்:நேசன்)

# வர்ணங்களின் மொழிகள் கண்காட்சியை பெருமளவானோர் பார்வையிட்டு வருகின்றனர்

வலி.வடக்கு,ஒக்.23

யர்ழ்ப்பாணம் பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் மாணவர்களின் 'வர்ணங்களின் மொழிகள்' எனும் மாபெரும் கலைக் கண்காட்சியை பெரும் எண்ணிக்கையான மக்கள் பார்வை யிட்டு வருகின்றனர்.

இக் கண்காட்சி கடந்த சனிக்கிழமை மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

யாழ். மாவட்டத்தில் குறிப்பாக பட்டக் கல்விக்கான பயிற்சியை மேற்கொள்ளும் மாணவர்களினால் முதல்தடவையாக 'வர்ணங்களின் மொழிகள்' என்னும்கண்காட்சிஇடம்பெறுகின்றது.

இக்கண்காட்சியை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து நாளை புதன்கிழமை வரை இக் கண்காட்சி காலை முதல் மாலை வரை இடம்பெறவுள்ளது.

அதிக எண்ணிக்கையான மாணவர்களும் பொதுமக்களும் கண்காட்சியைப் பார்வையிட்டு வருகின்றனர். கண்காட்சியில் சுமார் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இருநூற்றுக்கு மேற்பட்ட சிற்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஓர் அறையில் மட்டக்களப்பின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் புகைப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. (203-86)

# வலுக்குறைந்தோருக்கு சுன்னாகத்தில் தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

வலுக்குறைந்தவர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம் சுன்னாகத்தில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான கட்டடம் சுன்னாகம் மின்சார சபை அலுவலகத்திற்கு அருகில் உள்ள காணி ஒன்றில் சமூகசேவைகள் அமைச்சின் நிதி உதவியுடன் அமைக்கப் படவுள்ளது.இந்த தொழில் பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல் நாடும் நிகழ்வு உடுவில் பிரதேச செயலாளர் செல்வி த.மஞ்சுளாதேவி தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ், மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோர் கட்டடத்திற்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்கள்.

இந்தக் கட்டடத்தில் தொழில் பயிற்சி நிலையம், வலுக்குறைந்தவர்கள் தங்கி நின்று கற்பதற்கான விடுதி மற்றும் சமையல் அறை என்பனவும் நிர்மாணிக்கப்படவுள்ளன. (203)

# குடாநாட்டில் பெய்துவரும் மழையால் விதைப்பு மேற்கொண்ட விவசாயிகள் மகிழ்ச்சி

நவாலி, ஒக்.23

குடாநாட்டில் தற்போது பெய்து வரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

விதைப்பை மேற்கொண்டி ருந்த விவசாயிகள் இதுவரை காலமும் மழை பெய்யாது இருந்தமையால் பெரும் கவலையடைந்து இருந்தனர்.

விதைப்பு செய்யப்பட்ட நெல்மணிகள் முளைவிட்டிருந்த போதும் அவை மேலும் வளர முடியாது, அதற்குத் தேவையான மழை கிடைக்காமையால் வாடிப் போய் காணப்பட்டன.

தற்போது மழை பெய்ததை அடுத்து அவை செழித்து நிற்பதைக் காணமுடிகிறது. இதனால் விவசாயிகள் திருப்தி அடைந்து காணப்படுகின்றனர்.

எங்கே மழை பெய்யாது விட்டு விடுமோ; பெரும் நஷ்டம் ஏற்பட்டு விடுமோ என்று ஏக்கமடைந்திருந்த விவசாயிகள் நிம்மதியுடன் காணப்படுகின்றனர்.

ஏ-9 பாதை மூடப்பட்டதையடுத்து குடாநாட்டுக்குத் தேவையான அரிசி எடுத்து வரப்படுவது குறைவடைந்துள்ளது.

இந்நிலையில் மழையும் பெய்யாது இருந்திருந்தால் குடாநாட்டு மக்கள் பெரும் பஞ்சத்தையே எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும் என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (203 - 100-68)

# இடைநிறுத்தப்பட்ட வழுக்கையாறுத் திட்டத்தை மீள ஆரம்பிக்க உலக வங்கி அங்கீகாரம்

யாழ்ப்பாணம்,ஒக்.23

இடைநிறுத்தப்பட்டுள்ள வழுக்கையாறுத் திட்டப் புனரமைப்பை மீள ஆரம்பிப்பதற்கு சுற்றுப்புறச் சூழல் முகாமைத்துவத் திட்டத்திற்கு(நியாப்) உலக வங்கி அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இத்தகவலை நியாப்பின் பிரதித் திட்டப் பணிப்பாளர் கா.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

வழுக்கையாறுப் படுக்கை அபிவிருத்தித் திட்டம் 2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டத்தால் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் என பிரதேச மக்கள் முறையிட்டதை அடுத்து 2006 ஆம் ஆண்டில்திட்டம்இடைநிறுத்தப்பட்டது.

இத்திட்டத்தால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து ஆராய்வதற்கென குழு ஒன்றும் நியமிக்கப் பட்டது. இக்குழு தனது அறிக்கையை அண்மையில் ஜனாதிபதி செயலகத்துக்குச் சமர்ப்பித்தது.

இதனை அடுத்தே திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கான அங்கீகாரத்தை உலக வங்கி வழங்கியுள்ளது. இது குறித்துக் கேட்டபோது நியாப் திட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:

வழுக்கையாறுத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டு சில காலத்திற்குப் பின்னர் இடைநிறுத்தப்பட்டது. திட்டம் குறித்து ஆய்வுக் குழு அறிக்கை சமர்ப்பிக்கவும் அதன் பின்னர் உலக வங்கியின் அங்கிகாரத்திற்காகவும் காத்திருந்தோம். தற்போது அது தனது அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

தொடர்ந்து கட்டுமாண வேலைகளை ஆரம்பிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.அரச அதிபர் நியாப் திட்டப்பணிப்பாளரைக் கேட்டுள்ளார்.

வழுக்கையாறுத் திட்டத்தின் கீழ் 84 மில்லியன் ரூபா செலவில் வேலைகளை மேற்கொள்வதற்கு மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் அராலி உவர்நீர் தடுப்பணை, கிராய் பிரதான வாய்க்கால், கேலன்காமம் குளம் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு மதிப்பிடப்பட்டு ஒப்பந்தகாரரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது ஏற்புட்டுள்ள கட்டடப் பொருட்களின் விலையேற்றம் குறித்தும், அதனால் ஏற்படும் செலவுகள் குறித்தும் தற்போது மதிப்பிடப்பட்டு வருகின்றது. இந்த மதிப்பீட்டுப்பணி முடிவடைந்ததும் மழைகாலம் முடிவடைந்ததும் கட்டுமாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும்- என்றார். (202)

# இறைச்சிக்கோழி வளர்ப்போருக்குப் பயிற்சி

கட்டைவேலி,ஒக்.23

வடமராட்சிப் பிரதேசத்தில் இறைச்சிக் கோழி வளர்ப்போருக்கான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மந்திகையிலுள்ள பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் வைத்திய அதிகாரி சி.வசீகரன் தலை மையில் நடைபெறும்.

இப் பயிற்சியைப் பெற விரும்பும் கோழி வளர்ப்பாளர்கள் தம்மைப் பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-160)

# தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.23

வலி. தென்மேற்கு பிரதேசசபை தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடமாடும் நூலக சேவை ஒன்றை நேற்று ஆரம்பித்துள்ளது.

இந்த நூலக சேவை நேற்று திங்கட்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை கந்தரோடை சுப்பிரமணியம் வாசியசாலையிலும்-

நேற்றுத் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 29ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை தாவடி மத்திய சனசமூக நிலையத்திலும் -

எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 29ஆம் திகதிவரை ஏழாலை சைவமகாஜன வித்தியாசாலையிலும் இடம் பெறவுள்ளது.

பல்துறை சார்ந்த நூல்கள், சஞ்சிகைகள் போன்றன இச்சேவையின் போது காட்சிப்படுத்தப்படவுள்ளன.

பொதுமக்கள், மாணவர்கள் அனைவரும் இச்சேவையின் போது நூல்களைப் பார்வையிட்டு வாசிக்க முடியும்.

அத்துடன் புத்தகங்களின் கண்காட்சி, விற்பனை என்பனவும் இச்சேவையின் போது நடத்தப்படவுள்ளன.

பிரதேச நூலகங்களுக்குரிய நூல்களை அன்பளிப்பாக வழங்க விரும்புவோர் விசேட கழிவுடன் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் பாவித்த நூல்களை வழங்கவும் முடியும் என்று வலி. தெற்கு பிரதேச சபை தெரிவித்துள்ளது. (203)

* * *

சாவச்சேரி பிரதேச சபை நடத்தும் தேசிய வாசிப்பு மாத இறுநாள் விழா நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பிரதேசசபைச் செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்விசார் நூலகர் செல்வி.அ.ஸ்ரீகாந்த லட்சுமியும் சிறப்பு விருந்தினராக உதவிப்பிரதேச செயலர் திருமதி அஞ்சலி தேவி சாந்தசீலனும் கலந்து கொள்வர். (203)

# வடமராட்சியில் முதலிடம்பெற்ற புலமைப்பரிசில் மாணவியை படையினர் பாராட்டினர்

பருத்தித்துறை,ஒக்.23

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 183 புள்ளிகளைப் பெற்று வடமராட்சியில் முதலாம் இடத்தைப்பெற்ற கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவி செல்வி துஷிதா மனோகரனை 524 இராணுவப் படையணி பாராட்டி பரிசில் வழங்கிக் கௌரவித்துள்ளது. இவர் யாழ். மாவட்டத்தில் 5 ஆவது இடத்தைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (203-218)

# புதிய அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம், ஒக்.23

தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியின் புதிய அதிபராக க.காராளசிங்கம் கடந்த முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

மகாஜனாக் கல்லூரியின் வர்த்தக ஆசிரியராகவும், [illegible] கடமையாற்றிய [illegible] மு.சொர்ணலிங்கம் ஓய்வு பெற்று சென்றதை அடுத்துநியமிக்கபட்பட்டுள்ளார். (203)

# சர்வதேச எயிஸ்ட் தினத்தையொட்டி சுகாதாரத் திணைக்களம் நடத்திய போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட மாணவன் முதலிடம்

வலி வடக்கு,ஒக்.23

வட மாகாணக் கல்வி அமைச்சுடன் இணைந்து சுகாதார சேவைகள் திணைக்களம் நிக்கொட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச எயிட்ஸ் தினத்தையொட்டி நடத்திய எயிட்ஸ் விழிப்புணர்வு சித்திரப்போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட மாணவன் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

வட மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பாடசாலைகளும் இப் போட்டியில் கலந்து கொண்டன.

இதில் வட மாகாணத்தில் முதலாம் இடத்தை முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மல்லாவி மத்திய மகாவித்தியாலய ஆண்டு 10 மாணவனான தம்பிநாதன் துஷாந் பெற்றுள்ளார். இவர் 20 ஆயிரம் ரூபா பரிசையும் சான்றிதழையும் பெறவுள்ளார்.

இரண்டாம், மூன்றாம் இடங்களை யாழ். மாவட்ட மாணவர்கள் பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

இரண்டாம் இடத்தை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த 2008 ஆம் ஆண்டு ஜி.சி.ஈ.உயர்தர மாணவியான செல்வி குகநாதன் அபர்ணா பெற்று 15 ஆயிரம் ரூபா பணப்பரிசையும் சான்றிதழையும் பெறவுள்ளார்.

மூன்றாம் இடத்தைச் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 2007 ஆம் ஆண்டு ஜி.சி.ஈ.உயர்தர மாணவன் மகாதேவன் ரகுநாதன் பெற்றுக் கொண்டதன் மூலம் 10 ஆயிரம் ரூபா பணப்பரிசையும் சான்றிதழையும் பெறவுள்ளார். (203-86)

# நிகழ்வுகள்

பருத்தித்துறை,ஒக்.23

வடமராட்சி வலய முறைசாராக் கல்விப்பிரிவின் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை கற்கோவளம் லீட்ஸ் மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்விற்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தலைமை வகிப்பார். (203-218)

* * *

ஏழாலை,ஒக்.23

சிவலிங்க யோககேந்திர நிலையம் [illegible] வகுப்புக்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி திருநெல்வேலி வேதாந்த மடத்தில் ஆரம்பமாகவுள்ளது.

விரும்பியோர் இணைந்து கொள்ள முடியும் என அதன் இயக்குநர் தெரிவித்தார். (203-79)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.23

'அன்பமுதூறும் அயலார்' என்னும் நாடக ஆற்றுகை நாளை புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறை, நாடகமும் அரங்கியலும் மாணவர்களின் தயாரிப்பில் க.ரதீதரனின் நெறியாள்கையில் இது இடம்பெறவுள்ளது.

குழந்தை ம.சண்முகலிங்கம் இதனை ஆங்கில மொழியில் இருந்து தமிழுக்கு மொழி பெயர்த்துள்ளார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கார்த்திகேசு இரத்தினம்

(முன்னாள் ஆசிரியர் - யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை)

| பூவுலகு | சிவகதி |
|---|---|
| 24.07.1927 | 23.09.2007 |

திதி - புரட்டாதி பூர்வபக்க துவாதசி

மறைந்தும் மறையாத எங்கள் அப்பா
ஆசிரியர் இரத்தினம் பெரியோய்!
இனிய தமிழ் பேசி இன்முகங்காட்டி
அன்பு சொரிந்து அறவழி காட்டி
பண்பு பேணி பலகலை தந்து
பலரேத்த வாழ்ந்தாய் பாரினில் முதன்மை பெற்றாய்
விண்ணுக்கும் விரும்பு விறநடை போட்ட
உன் நினைவு மாற்ற உலகில் யாருளர்.
அப்பா உங்களின் ஆத்ம சாந்திக்காக
எல்லாம் வல்ல ஓடையம்பதி
சுற்பகவிநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (67149) மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## அறநெறிப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஒக்.23

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குக் கடந்த சனிக்கிழமை நடத்தப்படவிருந்த அறநெறிப் போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 நிலையங்களில் போட்டிகள் நடத்தப்படுமெனவும், போட்டிகளில் 2 ஆயிரத்து 500 மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-204)

## பருத்தித்துறை பொதுச்சந்தை ரூ. 5 லட்சம் செலவில் புனரமைப்பு

பருத்தித்துறை,ஒக்.23

பருத்தித்துறை நகர சபைப் பொதுச் சந்தை ஐந்து லட்சம் ரூபா செலவில் திருத்திப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இச் சந்தை புனரமைப்பு நடவடிக்கைகளைப் பருத்தித்துறை நகரசபை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-218)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 09 * 02 * 1954



தோற்றம் 03 * 01 * 1959

அமரர்கள்

### திரு. திருமதி சிங்கராசா இரஞ்சிதமலர்

மறைவு: 09*09*2007

திதி: 23.10.2007

ஆகியோரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (23.10.2007) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னார்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பூர்மடம்,
கோப்பாய் வடக்கு, கோப்பாய். (67144) பிள்ளைகள்.



## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 23.09.2007 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்

### பண்டாரி கிருஷ்ணர்

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (23.10.2007) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அவ்வமயம் தாங்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தாவடி வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (67147) குடும்பத்தினர்.



## இறைச்சிக்கோழி தேவை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள், ஊர்ச்சேவல்கள் என்பன நியாயமான விலைகளில் கொள்வனவு செய்யப்படும். உடன் தேவை.

தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி
(67251)

## வேலையாள் தேவை

லொறி ஓடக்கூடிய சாரதியும், டீசல் இயந்திர வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள மெக்கானிக்கும் தேவை.

தொடர்பு:-
சிவலிங்கம் மோட்டோஸ்,
77, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். (67133)

வெளிமாவட்ட கல்விசார்/சாரா அரச உத்தியோகத்தர்களுக்கான

## அவசர கலந்துரையாடல்

இடம்:- SCIENCE HALL, JAFFNA
நேரம்:- 9 a.m புதன்கிழமை 24.10.2007
விடயம்:- விவரங்கள் சேகரித்தல்
(உத்தியோக அ.அட்டையுடன் வரவும்)
குறிப்பு:- அனைவரும் தவறாது சமுகம் தரவும்
(67148) செயற்பாட்டாளர்கள்.



## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரும், யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாச உப - தலைவருமான

அமரர்

### சின்னப்பிள்ளை சுப்பிரமணியம்

அவர்கள் அகாலமரணமடைந்த செய்தியினை கேள்வியுற்று அதிர்ச்சியடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி கிழக்கு, ப.நோ.கூ. சங்கம், கொடிகாமம். பணிப்பாளர்கள், பணியாளர்கள். (சி-54094)



## கண்ணீர் அஞ்சலி

பிரபல தவில் வித்துவானும் எனது மருமகனுமான

'லயஞான சுரபி'



### கந்தசாமி நித்தியானந்தன்

அவர்கள் கனடாவில் காலமான செய்தி அறிந்து மிகவும் துயர் அடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில். (67141) தகவல்: கலாபூஷணம் K.R. சுந்தரமூர்த்தி (மாமன்).



## தவறிவிட்டது

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி என்னும் முகவரியைச் சேர்ந்த சின்னையா சிவானந்தம் என்பவரது தேசிய அ. அட்டை (342022740V) 8.10.2007 அன்று பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் சூரியா பார்மசி, அச்சுவேலி (பஸ்நிலையம் முன்பாக) என்னும் முகவரியில் ஒப்படைத்து தவவும்.

சன்மானம் வழங்கப்படும் (67145)

## வீடு விற்பனைக்கு

இல.31, கம்பஸ் லேன், திருநெல்வேலியில் அமைந்துள்ள அண்ணளவாக 11/4 பரப்புக்குள் அடைந்த வீடு உடன் விற்பனைக்குண்டு. (தளபாடங்களும் விற்பனைக்குண்டு)

தொடர்புகளுக்கு:
Campus Lane,
Thirunelvely, Jaffna.
T.P.077 4007281 (67137)



## அன்பமுதூறும் அயலார்

(நாடக ஆற்றுகை)

ஆங்கில மொழியில் இருந்து தமிழில்: குழந்தை ம.சண்முகலிங்கம்

நெறியாள்கை: திரு.க. ரத்தரன்

காலம்: 24.10.2007 நேரம்: முற்பகல் 10.30
இடம்: கைலாசபதி கலையரங்கு, யாழ்.பல்கலைக்கழகம்
தயாரிப்பு: நுண்கலைத்துறை நாடகமும் அரங்கக் கலைகளும் கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்

விளம்பர அனுசரணை:

Photo copy, Computer Type Setting, Laser Print, Lamination, Binding offset works, Digital Print, Scanning என்பவற்றுக்கு யாழ்.மண்ணில் அதி குறைந்த கட்டணத்தில் விரைந்த தரமான சேவையை வழங்கும் ஒரே ஒரு ஸ்தாபனம்.

**NEW GOLDEN STAR**

226, Ramanathan Road, Thirunelvely, Jaffna.
(67142) T.P.: 077 4011254



## மரண அறிவித்தல்



### சின்னப்பிள்ளை சுப்பிரமணியம்

(முன்னாள் வயோதிபர் இல்ல உத்தியோகத்தர், கைதடி மேற்கு ப.நோ.கூ சங்கத் தலைவர், யாழ்.விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர்)

கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (22.10.2007) திங்கட்கிழமை அதிகாலை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பிள்ளை - பொன்னி தம்பதியரின் அருமைப் புதல்வனும் கந்தையா - மாரிமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சிறீஸ்கந்தராசா (R.M. மரக்கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), சிவவாசமலர் (இத்தாலி), யோகேஸ்வரி (இத்தாலி), மங்களேஸ்வரி (சுவிஸ்), விவேகானந்தராசா (சுவிஸ்), வரதராசா (இத்தாலி), கமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுவேந்திரராணி, செல்வறட்ணம், சின்னராசு, சிவராமலிங்கம், சந்திரகலா, ராதிகா, மனோகரராசா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சீதேவி, கந்தையா, சின்னத்தம்பி மற்றும் சின்னன், சங்கரன், இலட்சுமி, வேலாயுதர் (Rtd. C.T.B.), நடேசு, தாமோதரம்பிள்ளை, காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இன்று (23.10.2007) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி. (67150) தகவல்: குடும்பத்தினர்.



பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - யாழ்ப்பாணம்

பெறுகை அறிவித்தல் (சுகாதாரத்துறை அபிவிருத்தி நிதி) HSDP - 2007

## வாகனங்கள் திருத்தம்

பின்வரும் வாகனங்கள் திருத்தம் செய்வதற்கான கேள்விகள் தகுதியான நிறுவனங்களிடம் இருந்து எம்மால் கோரப்படுகின்றது. இதற்கான கேள்விப் படிவங்களை மீளளிக்கப்படாத கேள்வித்தொகை ரூபா 100/- உம் மீளளிக்கப்படக்கூடிய கேள்வித்தொகை ரூபா 1000/-உம் செலுத்தி எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவம் பெறும் இறுதித் திகதி: 30.10.2007 பி.ப. 3 மணி வரை

கேள்வி திறக்கப்படும் திகதி: 31.10.2007 மு.ப. 10 மணி

சித்திபெறும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் 3% மீளளிக்கக்கூடிய பாதுகாப்புப் பிணைப்பணமாக செலுத்தவேண்டும்.

| வாகன இல. | இனம் | பார்வையிடும் இடம் |
|---|---|---|
| 227-3306 | லொறி Eicher | சு.வை.அ பணிமனை, பருத்தித்துறை |
| 56-8024 | பிக்கப் Mitsubishi | பி.சு.சே.ப.பணிமனை, யாழ்ப்பாணம் |
| 61-5956 | வான் Toyota | பி.சு.சே.ப.பணிமனை, யாழ்ப்பாணம் |
| 42-0228 | லொறி Dyna | பி.சு.சே.ப.பணிமனை, யாழ்ப்பாணம் |

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பி.சு.சே.ப. பணிமனை, யாழ்ப்பாணம். (சி/54089)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேசிய மட்ட விளையாட்டு விழா

# ஹாட்லி மாணவன் ஹரிகரனுக்கு குண்டெறிதலில் வெள்ளிப் பதக்கம்



யாழ்ப்பாணம்,ஒக்.23

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டு நிகழ்வின் குண்டெறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் வடிவேஸ்வரன் ஹரிகரன், இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.

17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியிலேயே இவர் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மயிலிட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட ஹரிகரன் இடம்பெயர்ந்து தற்போது வடமராட்சியில் வசித்து வருகின்றார். தரம் 5 முதல் ஹாட்லிக் கல்லூரியில் அவர் கல்வி பயின்று வருகின்றார்.

இந்தச் சாதனை தொடர்பாக ஹரிகரன் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து போட்டிக்குச் சென்ற எனக்கு இந்த வெற்றி கிடைத்தமை மிகப் பெரிய சந்தோஷம். நான் இந்தச் சாதனையைப் படைப்பதற்கு எனக்கு உறுதுணையாக இருந்த கல்லூரி அதிபர் எஸ்.தெய்வேந்திரராசா, விளையாட்டுப் பொறுப்பாசிரியர் சி.தவராசா, ஆசிரியர் அ.மோகன், பழைய மாணவர் த.கிருபாகரன் ஆகியோர் இருந்துள்ளனர். அத்துடன் எனது தந்தையாரும் எனக்கு உதவியுள்ளார்.

குறுகிய காலத்தில் கடின பயிற்சியை மேற்கொண்டதன் மூலம் இந்த வெற்றி கிடைத்தது. நாம் தேசிய மட்டப் போட்டிக்குச் செல்வது என்பது இறுதிவரை இழுபறி நிலையில் தான் இருந்தது. இதன் காரணமாக என்னால் குறுகிய காலப் பயிற்சியை மட்டுமே மேற்கொள்ள முடிந்தது.

எமது கல்லூரியில் போதிய விளையாட்டு வசதிகள் இல்லை. பயிற்றப்பட்ட விளையாட்டுப் பயிற்சியாளர்களும் இல்லை. அவ்வாறான நிலையிலும் விளையாட்டுகளில் எமது மாணவர்கள் தொடர்ந்தும் பல சாதனைகளைப் படைத்து வருகின்றனர். அந்த வரிசையில் நானும் ஒருவன்.

பாட சாலைச் சமூகம் எனக்கு வழங்கிய ஒத் துழைப்பின் மூலம் இந்த வெற்றி கிடைத்தது.

வசதிகள் இல்லையென்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருப்பதைவிட இருக்கும் வசதிகளை வைத்துச் சாதனை படைப்பதுதான் சிறந்தது - என்கிறார் அவர்.

வ.ஹரிகரனைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக இன்று செவ்வாய்க்கிழமை காலை ஹாட்லிக் கல்லூரியில் பாராட்டு விழா ஒன்று நடைபெறவுள்ளது. ஹாட்லிக் கல்லூரி அதிபர் இதற்குத் தலைமை தாங்குவார். (50 - 155)

# ஜெயரெட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம் ஜொனியன்ஸ் வி.க. சம்பியனானது

வலி.வடக்கு,ஒக்.23

அமரர் ஜெயரெட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்திய 50 ஓவர்கள் கொண்ட மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இறுதிப் போட்டியில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகமும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகமும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் 43 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 821 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. ஜொனியன்ஸ் அணி சார்பில் துடுப்பெடுத்தாடிய வி.காண்டீபன் 119 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இந்த ஆண்டு கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் பெறப்பட்ட முதல் சதம் இதுவாகும். வி.குமணன் 44 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

ஜொலிஸ்ரார் சார்பில் பந்துவீசிய நாதன் 25 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் கைலேஸ்வரன் 36 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 27 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 151 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண் டது.

இதில் அருண்குமார் 48, கைலேஸ்வரன் 27, சுதாகரன் 21 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற் றுக் கொடுத்தார்கள்.

ஜொனியன்ஸ் அணிசார்பில் பந்து வீசிய ரதீஸ்குமார் 29 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

தொடர் ஆட்டநாயகனாகவும் போட்டியின் சிறந்த வீரனாகவும் வி.காண்டீபன் தெரிவு செய்யப்பட்டார். (50-86)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.23

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளிடையே டயமன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றுவரும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**18 வயதுக்குட்பட்டோருக்கான போட்டி**

**காலை 8 மணி**

* நெல்லியடி ம.ம.வி. எதிர் உடுப்பிட்டி அ.மி
* சிதம்பராக்கல்லூரி எதிர் அல்வாய் வட றோ.க.
* கொற்றாவத்தை எதிர் வேலாயுதம் ம.வி.
* மணற்காடு றோ.க. எதிர் தேவரையாளி இ.க. (50-155)

* * *

வலி.வடக்கு,ஒக்.23

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

**3ஆம் இடத்திற்கான ஆட்டம்**

யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

**இறுதியாட்டம்**

கொக்குவில் இந்துக்கல்லூரி எதிர் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.

### விளையாட்டு

**16 வயதுப் பிரிவு**

யாழ் இந்துக் கல்லூரி எதிர் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் செங்குந்த இந்துக் கல்லூரி. (50-86)

# கிழக்கை மீட்டதாக தம்பட்டம் அடிக்கும் அரசு இப்போது தெற்கையும் இழந்து வருகின்றது!

### யால சம்பவம் அதற்கு உதாரணம் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு,ஒக்.23

கிழக்கு மாகாணத்தை முழுமையாகக் கைப்பற்றிவிட்டோம் என்று தம்பட்டம் அடிக்கும் அரசு இப்போது தெற்கையும் புலிகளிடம் கோட்டை விடுகிறது. அரசு, நாட்டு மக்களுக்கு உண்மை நிலையை அறிவிக்க வேண்டும் என்று குற்றம் சாட்டுகின்றது ஐக்கியதேசியக் கட்சி.

கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றி விட்டோம். புலிகளை முற்றாக ஒழித்துவிட்டோம் என்று அரசு வெற்றி விழாக் கொண்டாடியது. இது யாரை ஏமாற்றுவதற்கான நாடகம்?

இப்பொழுது கதிர்காமத்துக்கு வந்து படையினரைக் கொன்று குவித்துவிட்டுப் போகின்றனர். புலிகள் இங்கே எப்படி வந்தனர்? வான் மார்க்கமாகவா அல்லது கடல் மார்க்கமாகவா?

அரசு நாட்டு மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றுகின்றது. கிழக்கை மீட்டு விட்டோம் என்று புருடாவிடும் அரசு, தெற்கையும் படிப்படியாக இழந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதனை கதிர்காம சம்பவம் ஊர்ஜிதப்படுத்துகின்றது என்று ஐ.தே.க. உறுப்பினர் தெரிவித்தார். (சி)

# உள்ளூர் அரிசியை 25 ரூபாவுக்கு விற்றுவிட்டு 40 ரூபாவுக்கு இறக்குமதி செய்கின்றது அரசு!

### இதுதான் மஹிந்த சிந்தனைத் தத்துவமா என்கிறார் ரவி எம்.பி.

கொழும்பு, ஒக். 23

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் அரிசியை கோழித்தீன் உற்பத்தியாளர்களுக்கு விற்பனை செய்துவிட்டு, வெளிநாட்டில் இருந்து 40 ரூபாவுக்கு அரிசியை இறக்குமதி செய்யப்போகின்றார்களாம். இது தான் மஹிந்த சிந்தனையின் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் தத்துவம் என்று விமர்சிக்கின்றார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணா நாயக்க.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் அரிசியை கிலோ 25 ரூபாவுக்கு கொள்முதல் செய்யும் சி.ஐ.சி. நிறுவனம் அதனைக் கொண்டு கோழித் தீனியைத் தயாரிக்கின்றது. மக்கள் சாப்பிட அரிசி இல்லை. இதற்குப் பரிகாரம் காணமுடியாத அமைச்சர் பந்துல குணவர்த்தன வெளிநாட்டில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யப்போகின்றாராம்.

ஏற்கனவே அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்து அதனைச் சந்தைப்படுத்த முடியாமல் உளுத்துப்போய் குப்பையில் கொட்டியதை இதே பந்துல குணவர்த்தனதான் கடுமையாக விமர்சித்தார்.

இப்பொழுது அதே தவறை இந்த மனிதரும் செய்யப்போகின்றார். இவருக்குத் தைரியம் இருந்தால் கோதுமை மாவை இறக்குமதி செய்து குறைந்த விலையில் விநியோகிக்கட்டும் என்று சவால் விடுக்கின்றேன் என்றும் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டார். (சி)

# பிறிமாவிடம் கழுத்தைக் கொடுத்துவிட்டு நிமிரமுடியாமல் அந்தரிக்கின்றது அரசு!

கொழும்பு,ஒக்.23

அரசு பிறிமா நிறுவனத்திடம் கழுத்தைக் கொடுத்துவிட்டு நிமிர முடியாமல் மூச்சுத் திணறுகின்றது என்று கிண்டல் செய்கின்றார் ரவி கருணாநாயக்க எம்.பி.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போதே ரவி கருணாநாயக்க இப்படிக் கூறினார்.

''2001ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருக்கும்போது பிறிமா நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றை செய்ததன் மூலம் ஏகபோக உரிமை அந்த நிறுவனத்திற்கே வழங்கப்பட்டுள்ளது. இதனால்தான் மாவின்விலை அதிகரித்துள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.'' இது சரிதானா என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

''உங்களுடைய கூற்று தவறானது. ஆனாலும் சரியான நேரத்தில் இந்தக் கேள்வியைக் கேட்டுள்ளீர்கள்.

உண்மை இதுதான். 2001ஆம் ஆண்டு இறுதியிலேயே ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தது.

ஆனால், 2001ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அப்போது அதிகாரத்தில் இருந்த அரசுதான் பிறிமா நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டது.

''இந்த ஒப்பந்தத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவும் கையொப்பம் இட்டுள்ளார். ஒப்பந்தத்தின் படி மாவின் விலைக் கட்டுப்பாடுகளில் அரசு தலையிட முடியாது என்று திட்டவட்டமாக அடித்துக் கூறப்பட்டுள்ளது. இதனால்தான் பிறிமா நிறுவனம் தன்னிச்சையாக மாவின் விலையை அதிகரித்துக் கொண்டே போகின்றது. இன்றும் ஆட்சியில் இருக்கும் அதே கட்சி அரசு தான் இந்த ஒப்பந்தத்தை செய்துள்ளது. பிறிமா நிறுவனத்திடம் கழுத்தைக் கொடுத்து விட்டு இப்பொழுது மூச்சுவிட முடியாமல் தடுமாறுகின்றது. இதுதான் உண்மை'' - என்றார் ரவிகருணா நாயக்க எம்.பி. (சி)

# குடும்பிமலைப் பகுதி முழுவதையும் சிங்கள மயப்படுத்த முயற்சிகள் மும்முரம்!

மட்டக்களப்பு,ஒக்,23.

கிழக்கில் அரச படைகளால் கைப்பற்றப்பட்ட தொப்பிகலப் பகுதியை சிங்கள மயப்படுத்தும் முயற்சிகள் அரசுத் தரப்பினால் இரகசியமான முறையில் - கனகச்சிதமாக - முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

குடும்பி மலையில் 2 ஆயிரம் ஏக்கர் பிரதேசத்தைச் சுற்றிப்பிடித்து வளைத்துப் போட்டு, அங்கு சுதந்திர வர்த்தக வலயம் ஒன்றை நிறுவி, அதன்மூலம் சிங்களவர்களின் ஆதிக்கத்தை அங்கு வலுப்பெறச் செய்வதற்கு அரச உயர்மட்டத்தினர் திரை மறைவில் சதித்திட்டம் தீட்டி வருகின்றனராம்.

இந்த வர்த்தக வலயத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை முதலீடு செய்யவைப்பதற்கான ஊக்குவிப்பு முயற்சியில் அரசு தற்போது ஈடுபட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு சிங்கள முதலிட்டாளர்களுக்கே அதிக வாய்ப்புகளை வழங்கவும் அரச உயர் மட்டத்தில் உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் கசிந்திருக்கின்றன.

இந்த வர்த்தக வலயத்தை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் பகுதியில் இருக்கின்ற காடுகளையும் மலைகளையும் அழித்தொழிக்கும் திட்டம் ஒன்றையும் அரசு வெகு விரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இந்த வருட இறுதிக்குள் பௌத்த விகாரையை நிர்மாணித்து முடிப்பதென்ற திட்டத்தில் அதி தீ[illegible] என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் இந்தத் தேரர்கள் குழு இதுவரை நான்கு தடவைகள் தொப்பிகலவிற்குச் சென்று திரும்பியுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

இத்திட்டத்தின் கீழ் அண்மையில் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இலுப்படிச் சேனை சந்தியில் இருந்து தரவை மற்றும் குடும்பிமலை ஆகிய இடங்களுக்குச் செல்லும் வேப்பவெட்டுவான் வீதி ராஜ பத்திரன மாவத்தை என்றும், வவுணதீவு - தாண்டியடி வீதி சுனித்திரபுர என்றும் பெயர் மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இன்னும்பல வீதிகளுக்கும் சிங்களப் பெயர்களை வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் - சிங்களவர்களை [illegible]யேற்றும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அறியவந்திருக்கின்றது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் கருணா குழுவின் நடவடிக்கைகள் பெருமளவில் முடக்கம்; கண்காணிப்புக் குழு தகவல்

## மட்டு.நகரின் பக்கம் முழுக் கவனமும் திரும்புகிறதாம்

கொழும்பு,ஒக்.23

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலைப் பகுதியில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (கருணா குழு) அமைப்பின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டு வருவதாக கண்காணிப்புக் குழுவினர் தெரிவிக்கின்றனர். தங்கள் அவதானிப்பின்படி கருணா குழுவினரின் 5 அலுவலகங்களில் நான்கு மூடப்பட்டுவிட்டமை தெரியவந்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

கருணா குழு தனது முழுக் கவனத்தையும் மட்டக்களப்புப் பகுதிக்கு திருப்பியுள்ளனராம்.

ஒக்ரோபர் 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரையான கிழக்கு மாகாண களவாராந்த அறிக்கையில் கண்காணிப்புக் குழுவினர் கிழக்கு மாகாணத்தின் களநிலை குறித்து இவ்வாறு தெரிவித்திருக்கின்றனர்

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிக்குடிசாறில் ஒக்ரோபர் 8ஆம் திகதி கிளைமோர் தாக்குதல் ஒன்று இடம்பெற்றது. புலிகளின் தகவலின்படி ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டுப் பத்து பேர் காயமுற்றனர். அதே சமயம் தங்கள் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டு இருவர் காயமடைந்ததாக இராணுவம் அறிவித்தது.

இதற்கு முன்னதாக இரு தரப்பினருக்குமிடையில் இரு மோதல் சம்பவங்கள் பற்றிய தகவல் கண்காணிப்புக் குழுவுக்கு கிடைத்தது. இதில் படைதரப்பில் ஒருவர் காயமுற்றதாக அறியவந்தது.

**முஸ்லிம் போட்டிக் குழுக்கள் மோதல்**

அம்பாறையில் இருந்து 25கி.மீ. தென் கிழக்கிலுள்ள அக்கரைப்பற்றில் ஆயுதம் தரித்த முஸ்லிம் குழுவொன்றின் தலைவர் என்று கருதப்பட்ட நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். முஸ்லிம் ஆயுதக் குழுக்களுக்கிடையிலான போட்டியின் விளைவு இதுவென்று பொலிஸார் தெரிவித்தனர். ஒக்ரோபர் 10ஆம் திகதி காத்தான்குடியில் 30 வயதான நபர் ஒருவர் ஆயுததாரிகளால் சுட்டுக் காயப்படுத்தப்பட்டார். அடுத்த நாள் சித்தாண்டியில் 25 வயதான ஒருவர் தமது வீட்டின் முன்வைத்து சுட்டுக்காயப்படுத்தப்பட்டார். தம்பலகாமத்தில் ஒக்ரோபர் 8ஆம் திகதி 35 வயதான ஒருவர் கடத்தப்பட்டார். பின்னர் அவர் வீடு திரும்பினார்.

ஒக்ரோபர் 11இல் 19 வயதான ஒரு பெண் கல்முனையில் வேலைத்தளத்திலிருந்து கடத்தப்பட்டார். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இதைச் செய்ததாகக் கூறப்பட்டது. அப்பெண்ணின் தாயார் மனித உரிமை ஆணையத்தில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்டார். ஆனால் இருவரும் அச்சத்தில் வாழ்கின்றனர்.

மேலும் இரு கடத்தல்கள் பற்றிய முறைப்பாடுகள் கண்காணிப்புக் குழுவுக்குக் கிடைத்தன. ஒக்ரோபர் 10ஆம் நாள் 26வயதான ஒருவர் மட்டக்களப்பில் வேலைத்தளத்திலிருந்து கடத்தப்பட்டார். பொலிஸ் மற்றும் சாதாரண உடை தரித்த நான்கு பேர் இக் கடத்தலை செய்ததாகக் கூறப்பட்டது.

இதில் தமக்கு எதுவித சம்பந்தமுமில்லையென தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளும் பொலிஸாரும் தெரிவித்துள்ளனர். திருகோணமலைக்கு வடக்கில் 3 கி.மீ தொலைவில் உப்புவெளி என்ற இடத்தில் ஒக்ரோபர் 14ஆம் திகதி 32 வயதான ஒருவர் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

**கருணா குழு செயற்பாடுகள் முடக்கம்?**

திருகோண்மலையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் குறைந்துள்ளதாகக் கண்காணிப்புக் குழு அவதானிப்பில் தெரியவந்துள்ளது. அதன் 5 அலுவலகங்களில் நான்கு மூடப்பட்டு விட்டதாகத் தெரிகின்றது. கருணா குழுவினர் தமது கவனத்தை பெரும்பாலும் மட்டக்களப்புப் பகுதிகளிற்கே திருப்பியிருப்பதாக அறியப்படுகின்றது.

ஒக்ரோபர் 10ஆம் திகதி சோதனைச் சாவடிகளில் கருணா குழுவினர் தங்குதடையின்றி கடந்து செல்வதை கண்காணிப்புக் குழுவினர் அவதானித்திருந்தனர். கப்பல் துறைக்கு அருகாமையில் ஐந்து வாகனங்களின் அணியொன்று (5 வெள்ளை வாகனங்கள், ஒரு வெள்ளை பிக்கப் மற்றும் ஒரு செடான் வாகனம்) செல்வதைக் கண்காணிப்புக் குழுவினர் அவதானித்துள்ளனர். பிக்-அப் வாகனத்தின் பின்புறம் 15/16 வயது மதிக்கத்தக்க சிறுவர்கள் இருவர் இராணுவம் போன்ற உடைகளில் தார் சீலைகளால் ஓரளவு மூடப்பட்ட நிலையில் கிடப்பது தெரிந்தது. வான்களில் எட்டுப் பேர் அளவில் ஆயுதங்களுடன் சிவிலியன்கள் காணப்பட்டனர். சோதனைச் சாவடிகளின் ஊடாக இந்த வாகன அணி செல்வதை கண்காணிப்பாளர்கள் அவதானித்துள்ளனர்.

ஆயுதம் தரித்த சிவிலியன்களைக் கைது செய்யும் படியும் சகல வாகனங்களையும் சோதனைக்குட்படுத்தும்படியும் தங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் பின்னர் தெரிவித்தனர்.

ஈச்சிலம்பற்று பகுதியில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு பெரும்பாலும் முற்றுப்பெற்றுள்ளதாக கண்காணிப்புக் குழு அறிகின்றது. மக்கள் வாழ்விடங்களில் கண்ணிவெடிகள் பெரும்பாலும் அகற்றப்பட்டுவிட்டன. உயர்பாதுகாப்பு வலயத்திற்கு தெற்கில் மீள்குடியமர்வுகள் மாதக் கடைசியில் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ப)

## கந்தரோடை - அளவெட்டி குறுக்கு வீதி பெரும் சேதம்

கந்தரோடை வீதியையும் அளவெட்டி வீதியையும் இணைக்கும் குறுக்கு வீதி பொதுமக்கள், வாகனங்கள் பயணம் செய்யமுடியாத அளவுக்கு மிகவும் மோசமான முறையில் சேதமடைந்து காணப்படுகின்றது.

தோட்டப் பிரதேசம் ஊடாக செல்லும் இவ்வீதியில் நாளாந்தம் ஆயிரக்கணக்கான மக்கள் போக்குவரத்துச் செய்து வருகின்றனர்.

கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக எந்தவொரு பராமரிப்பும் இன்றிக் குன்றும் குழியுமாக இவ்வீதி காணப்படுவதுடன் மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதினால் பொதுமக்கள் வாகனங்களில் பயணம் செய்யமுடியாத அளவுக்கு மிகவும் மோசமாகக் காணப்படுகிறது.

எனவே உரியவர்கள் இந்த விடயத்தில் கவனமெடுத்து மக்களின் சிரமங்களைப் போக்க உதவ வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (203)


## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 * 03 * 1908



மறைவு 21 * 10 * 1999

**வீரகத்திப்பிள்ளை இராசசேகரம்**

[உரிமையாளர், வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ், சேகாம் அன் சன்ஸ்]

திதி: துவாதசி (23.10.2007)

*கண்ணை இமை காப்பது போல்*
*மக்கள் - மருமக்கள் - பேரப்பிள்ளைகள்*
*பூட்டப்பிள்ளைகள் அனைவரையும்*
*வண்ணமுறக்-காத்து - வளமுடன்*
*வாழ வழி அமைத்த - எம்*
*அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னாரின் நீங்கா நினைவில்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இல.9, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (67136)



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் மு.க.சிவபாதவிருதயர்

**(இளைப்பாறிய மக்கள் வங்கி வடவலய உதவிப் பொதுமுகாமையாளர்)**

*எமது பெருமதிப்பிற்குரிய மு.க.சிவபாதவிருதயர் அவர்கள் 19.10.20007 அன்று அகாலமரணமடைந்த செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும் கவலையுமடைந்தோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

*வடவலய உதவிப் பொதுமுகாமையாளரும்*
*வடபிராந்திய ஊழியர்களும்,*
**மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்.** (பி/54085)



## கணனிகள் வழங்குவதற்கான கேள்வி கோரல்

**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்**

கீழ்வரும் விவர பிரமாணங்களைக் கொண்ட கணனிகளையும் அவற்றோடு இணைந்த உதிரி இணைப்புகளையும் வழங்குவதற்கான கேள்வி கோரப்படுகிறது. கூறுவிலைகள் 05.11.2007ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகப் ***பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்*** என்னும் முகவரிக்கு சீல் இடப்பட்ட தபாலில் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கமுடியும்.

**நிபந்தனைகள்**

01. கணனிகளும் அவற்றோடு இணைந்த உதிரி இணைப்புக்களும் யாழ்ப்பாணத்திலே வழங்கப்படவேண்டும்.
02. உத்தரவாதம் குறிக்கப்படல்வேண்டும் (எத்தனை வருடங்கள்)

| | |
|---|---|
| 01. Computer System (Branded) | - 10 nos |
| 3.4GHz (2MB) Intel Pentium Processor | |
| 1 GB DDR Kingston RAM | |
| 128 MB Intergrated VGA Card | |
| 80 GB Hard Disk | |
| Combo Drive with DVD | |
| 17" LCD Monitor | |
| Keyboard | |
| Optical Mouse | |
| Modem - 56Kb | |
| Network Card | |
| 02. Laptop | - 01 no |
| 03. Printer-EPSON LQ-2180/LQ- 20902/LQ-2170 | - 02 nos |
| 04. HP Laser Printer - 1200 | - 01 no |
| 05. UPS - Power Tree 1.2KW | - 12 nos |
| 06. Two in one Printer - (Photocopy & Printer) | - 01 no |
| 07. Scanner | - 01 no |

**வைத்திய கலாநிதி ஏ.சு.ஞானஜோதி,**
*பணிப்பாளர், போதனா வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.* (பி/54081)



## இருபதாம் ஆண்டு நினைவஞ்சலி | முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர் **நாகமுத்து செல்லையா** — அமரர் **செல்லையா இராசம்மா**

| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 28.02.1909 | 14.11.1987 | 18.11.1921 | 02.11.2006 |

**திதி: நவமி** — **திதி: துவாதசி**

**எத்தனை ஆண்டுகள் சென்றாலும்**
**ஆறவில்லை எம் துயரம்**
**ஆயிரம் உறவுகள் இருந்தும்**
**அவையெல்லாம் எங்கள் தெய்வங்களின்**
**அன்புக்கு ஈடாகுமா?**
**ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள்**
**இனிய நினைவுகள் எம்மை விட்டு நீங்காது.**

*கனகசபை வீதி,*
*மானிப்பாய்,* (சி/54080)

தகவல்: குடும்பத்தினர் (மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்).



## கோழிக்குஞ்சு விநியோகம்

**BAHIRAHA**
புறொயிலர் குஞ்சுகள்
**PIRIMA** சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள்,
26.10.2007 மாலை விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.
தொடர்பு:
**ராஜீவ்,**
*நவாலி வீதி,*
*ஆனைக்கோட்டை.*
T.P.: 222 3529, 222 2867
(67135)



## மகளிருக்கான 3.நாள் அழகுக்கலை பயிலமர்வு

*அடிப்படை முக அழகுக்கலை* **(Basic Facial)** *இந்து கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம் மற்றும் மடிசார் குஜராத். கூர்க்காஸ், சிங்கப்பூர், சிங்கள முறைகளிலான சேலை அணிவிக்கும் முறைகள் என்பன எதிர்வரும் 25ம், 27ம், 28ம் திகதிகளில் காலை 9.00 மணிமுதல் பி.ப. 1.00 வரை போதிய விளக்கங்களுடனும் குறிப்புகளுடனும் குறைந்தகட்டணத்தில் நடைபெறும், வகுப்புக்களில் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் வழங்கப்படும்.*

*மேலும் விபரங்களை பி. ப. 1.00வரை அறிந்து கொள்ளலாம்*

**கலாலயா**
*பயிற்சியகம்*

*மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.* [பெருமாள் கோயிலுக்கு அண்மையில்]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி: 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

## வரவு - செலவுத் திட்டத்தில் அரசு கவிழ வாய்ப்புண்டா?

வருடாந்த வரவு - செலவுத் திட்டம் இன்னும் இரண்டு வாரங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் தோற்கடிப்பதன் மூலம் இந்த அரசைக் கவிழ்ப்பதற்கான வாய்ப்புகள் உண்டா என்பது குறித்துப் பல தரப்புகளிலும் பலத்த எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

இது விடயத்தில் எதிர்க்கட்சிகள் முனைப்பாக நிற்கின்றன. பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவோ கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றது. எப்படியும் வரவு - செலவுத் திட்டத்துடன் இந்த அரசை வீட்டுக்கு அனுப்பி விடுவோம் என அது மார்தட்டுகின்றது. ஆனால் அது அப்படி ஒன்றும் சாத்தியமான விடயம் அல்ல என்பதை அக்கட்சியின் தலைமையில் உள்ளோரே தனிப்பட்ட முறையில் ஒப்புக்கொள்ளாமல் இல்லை.

வரவு - செலவுத் திட்டத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளையும் அரசுக்கு எதிராக ஒன்றிணைத்தாலும் கூட, அதன் மூலம் நாடாளுமன்றத்தில் அரசைக் கவிழ்ப்பது இலகுவானதல்ல என்பதே நிதர்சனமாகும்.

அடுத்த எதிர்க்கட்சியான ஜே.வி.பியும் - இதுவரை மஹிந்த அரசை நாடாளுமன்றத்தில் காப்பாற்றி, அதற்கு முண்டு கொடுத்து வந்தாலும் - இம்முறை இந்த வரவு - செலவுத் திட்டத்தின் போது அரசுக்கு எதிராக வாக்களிக்கும் என்றே தோன்றுகின்றது.

ஏற்கனவே இந்த வரவு - செலவுத் திட்டத்துக்கு மூலமான அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தை ஜே.வி.பி. தனது நாடாளுமன்ற உறுப்பினரான ஹந்துன்நெத்தி மூலம் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து எதிர்த்திருந்தது. இந்தச் சட்டமூலம் அரசமைப்பையும், நாட்டின் இறைமையையும் மீறுகின்றது என அந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

வரவு - செலவுத் திட்டத்தில் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு அறிவிப்பை எதிர்த்து உயர்நீதிமன்றம் சென்ற ஜே.வி.பி., பெரும்பாலும் இந்த வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் எதிர்ப்பதற்கான சாத்தியங்களே அதிகம் காணப்படுகின்றன. அதற்கான சமிக்ஞைகளும் கொழும்பில் இருந்து வெளியாகுகின்றன.

மற்றைய பிரதான எதிர்க்கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. தென்னிலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்றுக்கு வழி செய்யும் தெற்கு அரசியல் குளறுபடிக்குள் தன்னை அது இந்தச் சந்தர்ப்பத்தில் முழு ஈடுபாட்டுடன் சம்பந்தப்படுத்திக் கொள்ளுமா என்பது சந்தேகமே. என்றாலும் தமிழர் தாயகம் மீது மிக மோசமான - மிகக் கொடூரமான - போர் ஒன்றைத் திணித்து வருகின்றது மஹிந்தரின் இந்த அரசு. அதற்கான 'யுத்த பட்ஜெட்' ஒன்றே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது. அந்த வரவு - செலவுத் திட்டத்தில் பெரும் நிதி, தமிழர் தாயக அழிப்புக்காக பாதுகாப்பு அமைச்சுக்கே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் அந்த வரவு - செலவுத் திட்டத்தை எப்படியும் எதிர்க்க வேண்டிய நிலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு.

எனவே, வழமைபோல - ஏனைய சட்ட மூலங்களை நாடாளுமன்றத்தில் எதிர்ப்பது போல - வரவு, செலவுத் திட்டத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கும் என எதிர்பார்க்கலாம்.

ஆனால், வாக்கெடுப்பு சமயம் தனது இருபத்தியிரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நாடாளுமன்றுக்குக்கூட்டி வரப் பண்ணி, வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக அவர்களை வாக்களிக்க வைப்பதன் வாயிலாக அரசைக் கவிழ்க்கும் ஓர் எத்தனத்துக்கு கூட்டமைப்பு வழி செய்யுமா என்பது தெரியவில்லை.

மங்கள சமரவீரவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் இரண்டு எம்.பிக்களும் வரவு - செலவுத்திட்டத்தில் அரசை எதிர்ப்பார்கள் என்பது உறுதி.

ஆனால் இத்தரப்புகள் எல்லாம் சேர்ந்து வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்க முடியுமா என்பதே இங்கு கேள்வியாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீல. சு. கட்சி மக்கள் பிரிவு ஆகியவை அனைத்தும் சேர்ந்து நாடாளுமன்றத்தில் 106 ஆசனங்களைக் கொண்டுள்ளன. நாடாளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமயவின் எம்.பியான வண. உடுவே தம்மாலோக தேரர் சுயாதீனமாகச் செயற்படுகின்றார். அவரையும் சேர்த்துக் கொண்டால் எதிர்த்தரப்பில் மொத்தம் 107 எம்.பிக்கள்.

ஆனால், வரவு - செலவுத் திட்டம் உட்பட ஏதேனும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்க வேண்டுமானால் 225 எம்பிக்களைக் கொண்ட சபையில் குறைந்த பட்சம் 113 பேராவது ஓரணியில் திரள வேண்டும். ஆக, இப்போது 107 எம்.பிக்களையே வரவு - செலவுத்திட்டத்துக்கு எதிராக எதிரணியால் திரட்டக்கூடியதாக இருக்கும் என்பதே நிதர்சன யதார்த்தமாதலால், ஆட்சிக் கவிழ்ப்பு என்பது உடனடியாகச் சாத்தியப்படக்கூடிய விடயமாகத் தெரியவில்லை.

அரசுக்குள் மோசமாக அவமானப்படுத்தப்பட்டு, அதன் காரணமாக அரசில் இருந்து வெளியேறிய மலையகக் கட்சி கூட மீண்டும் ஆட்சிக்கு முண்டு கொடுத்து, சலுகை பெறச் சென்று விட்டது. இக்கட்சியை அரசுப் பக்கமும் இல்லாமல், எதிர்க்கட்சிப்பக்கமும் இல்லாமல் நடுவில் விட்டு வைத்தால், வரவு - செலவுத்திட்ட சமயம் இக்கட்சி எதிரணிப்பக்கம் சாயவும் அதன் மூலம், வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதற்குத் தேவையான எம்.பிக்களை எதிரணி ஒன்று திரட்டவும் வாய்ப்புகள் இருப்பதை உணர்ந்துகொண்ட அரசுத் தலைமை, சமயம் பார்த்து மீண்டும் அமைச்சுப் பதவிகள் என்ற எலும்புத் துண்டை வீசி, அக்கட்சியைத் தன் பக்கம் வாலாட்டிக் கொண்டு வரப் பண்ணிவிட்டது.

இந்த மலையகக் கட்சிகளும், ஏனைய முஸ்லிம் தரப்புகளும் கொடுக்கும் முண்டுடன் இந்த 'யுத்த பட்ஜெட்'டை அரசு நாடாளுமன்றத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளே அதிகம் தென்படுகின்றன.

இந்த வரவு - செலவுத் திட்டத்திலும் எதிரணியை ஐக்கியப்படுத்தி, ஒன்றிணைத்து, அரசை வீழ்த்தும் முயற்சியில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற முடியாமல் போவாராயின், அவரது ஐ.தே.கட்சியில் 'மதில் மேல் பூனை'யாகக் குந்தியிருக்கும் மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பதவிகளுக்காகவும், அதிகாரத்துக்காகவும் ஆளும் தரப்புக்கு மாறவும், அதன் மூலம் ஆளும் தரப்பு நாடாளுமன்றில் மேலும் பலமடையவும் அதிக வாய்ப்புகள் இருப்பதையும் நாம் புறந்தள்ள முடியாது.

ஆக, இந்த வரவு - செலவுத் திட்டம் ஆளும் கட்சிக்குச் சோதனையா, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சிக்கு வேதனையா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# அநுராதபுரம் விமானத் தாக்குதல்: விசாரிக்க நிபுணர் குழுக்கள் இரண்டு

கொழும்பு, ஒக். 23

நேற்று அதிகாலை அநுராதபுரம் விமானப் படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் குறித்து விசாரிப்பதற்கு நிபுணர் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

விமானப் படைத் தளபதியினால் இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்தக்குழுவினர்விமானப்படைத்தளத்தை புலிகள் எந்த முனையில் இருந்துதாக்கினர் என்று முக்கியமாக ஆராய்வர் என்று விமானப் படைத் தளபதி தெரி வித்தார்.

விமானப் படையின் தலைமை அதிகாரி வைஸ் மார்ஷல் பிரேமச்சந்திர தலைமையிலான இந்த விசாரணைக்குழுவில் அதிகாரிகள் ஐந்து பேர் அங்கம் வகிக்கின்றனர். இதேவேளை-

மிகிந்தலைப் பகுதியில் விபத்துக்குள்ளான 'பெல் 212 ரக'' ஹெலி எவ்வாறு விபத்துக்குள்ளானது என்பது குறித்து மற்றொரு குழு விசாரணைகளை நடத்தும் என்றும் விமானப்படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்தவிபத்தில்ஹெலி முற்றாக நாசமடைந்து போனதோடு, அதில் பயணஞ்செய்த எல்லோரும் மரணமானார்கள். (அ-5)

# இப்படி ஒரு தாக்குதல் நடக்கும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை



கொழும்பு, ஒக். 23

''விடுதலைப் புலிகளின் விமானப்படை மற்றும் தரைப்படை ஆகியன நேற்று அதிகாலை அநுராதபுரத்திலுள்ள விமானப்படையினரின் தளத்தின் மீது தொடுத்த தாக்குதலை நாங்கள் சற்றும் எதிர்பார்க்கவேயில்லை.''

இப்படிக்கூறியிருக்கின்றார் அரசின் பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கில் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கும் விடுதலைப் புலிகள் இவ்வாறான தாக்குதல்களில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்றைய தாக்குதலில் 2 விமானப்படை அதிகாரிகள் உட்பட 9 படையினர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 5 பேர் விமானப்படையினரின் முகாமுக்குள்ளேயே உயிரிழந்துள்ளனர். சம்பவத்தில் மேலும் 20 படையினர் காயமடைந்தனர். அத்துடன் விடுதலைப்புலிகளின் 20 சடலங்கள் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

இப்படியானதொரு தாக்குதல் நடக்கும் என்று விமானப்படையினரும், நாங்களும் சற்றுக்கூட எதிர்பார்க்கவேயில்லை. - என்றார்.

## மட்டுவில் கமலாசனியில் பரிசளிப்பும் நிறுவுநர் தினமும்

யாழ்ப்பாணம், ஒக். 23

மட்டுவில் கமலாசனி வித்தியாலய பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் நாளைமறுதினம்வியாழக்கிழமை காலை9.30 மணிக்குவித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் செ. பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (1)

## விமானப்படைத் தாக்குதலின் பின்னர் இந்தியாவுடன் ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு ஒக். 23

அநுராதபுரம் விமானப்படைத் தளத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அதிரடித் தாக்குதலை நடத்தியதனைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவசர ஆலோசனை நடத்தியதாக ''இந்தியா டெய்லி'' செய்தி வெளியிட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் ராடரின் வழி காட்டுதலுடன் கூடிய ஏவுகணைகளைக் கொண்டு விடுதலைப்புலிகளின் வானூர்தி மீது சிறிலங்கா தாக்குதல் நடத்தலாம். அத்தகைய நவீன தொழில்நுட்ப ஆயுதத்தைப் பயன்படுத்தும் முன்னர் பிராந்திய நாடுகள் பலவற்றுடன் சிறி லங்கா ஆலோசனை நடத்துகிறது என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (அ)

## யாழ். இந்துவில் நாளை பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை முற்பகல் 9.45 மணிக்கு கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறுகிறது.

கல்லூரி அதிபர் வீ. கணேசராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வர்த்தக வங்கியின் தலைமை ஏற்றுமதி அதிகாரியும், கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளைத் தலைவருமான லயன் செ. இராகவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். லயன் சீமாட்டி இரஞ்சினி இராகவன் பரிசில்களை வழங்குவார்.(அ-1)

## அரசின் ஆழ்கடல் நடவடிக்கை நேற்றைய தாக்குதலால் முடக்கம்

கொழும்பு, ஒக். 23

அநுராதபுர தாக்குதலின் மூலம் சிறிலங்கா கடற்படையின் ஆழ்கடல் நடவடிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் முடக்கியுள்ளனர் என்று பாதுகாப்புத்துறை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் "எல்லாளன் நடவடிக்கை'' எனப் பெயரிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட அநுராதபுர தாக்குதலில் சிறிலங்கா வான்படையின் 12 முதல் 18 வரையிலான வானூர்திகள் அழிக்கப்பட்டிருக்கலாம் அல்லது சேதமாக்கப்பட்டிருக்கலாம். சீனத் தயாரிப்பான சிறிலங்கா வான்படையின் கே - 8 பயிற்சி ஹெலிகொப்டர் மற்றும் கடல்சார் நடவடிக்கைகான வேவு ஹெலிகொப்டர்கள் ஆகியனவும் இத் தாக்குதலில் ஆழிக்கப்பட்டுள்ளன என்றும் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

## நூல் வெளியீட்டு விழா

"குருகவி ம.வே. மகாலிங்கசிவம் வரலாறும் ஆக்கங்களும்'' என்னும் நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

ஆசிரியர்பா. மகாலிங்கசிவம் எழுதிய இந்நூல் யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரியின் ஆதரவில் வெளியிடப்படு கிறது.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா. வேதநாதனின் வெளியீட்டுரை, யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசாவின் அறிமுகவுரை ஆகியன இடம்பெறும்.

முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் முதல் பிரதியைப் பெறுவார். (அ-1)

## ஒரு குடும்பம் உட்பட எண்மர் நேற்று ஆணைக்குழுவில் சரண்

யாழ்ப்பாணம், ஒக். 23

உயிர் அச்சுறுத்தல் காரணமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட எட்டுப்பேர் நேற்று யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்தனர்.

கொடிகாமம், வேவில் பகுதியைச் சேர்ந்த தந்தை, தாய் அவர்களது முறையே 28, 24, 14 வயதுகளையுடைய மூன்று ஆண் பிள்ளைகளும் சரசாலை தெற்கு, கச்சாய், அச்சுவேலி வடக்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த மூன்று இளைஞர்களுமாக எட்டுப் பேர் நேற்றுச் சரணடைந்தவர்களாவர்.

இவர்களை பாதுகாப்பாக தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

இதேவேளை - இருவரைக் காணவில்லை என்ற முறைப்பாடும் பதியப்பட்டதாக ஆணைக்குழு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (5)

## ஆன்மீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ். ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் போயா ஆன்மிக நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை அதிகாலை நகரசங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நடைபெறவிருக்கின்றன. நண்பகல் நாரயண சேவையுடன் நிகழ்வுகள் நிறைவடையும்.(1)

## தாக்குதலை அடுத்து ஊரடங்கு 12 பேர் கைதாகி விசாரிக்கப்பட்டனர்

அநுராதபுரம் ஒக், 13

அநுராதபுரம் விமானத்தளம் மீது நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து அங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு நேற்று மாலை 4 மணிக்கு நீக்கப்பட்டது.

ஊரடங்கை நடைமுறைப்படுத்தி, பெரும் எண்ணிக்கையில் படையினர் குவிக்கப்பட்டு அங்கு தேடுதல் நடத்தப்பட்டது.

இத்தேடுதலில் 12 பொதுமக்கள் படையினரால் கைது செய்யப் பட்டனர். அவர்களில் எட்டுப்பேர் நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர். நால்வர் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப் பட்டு வருகின்றனர். (அ-1)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 07 : | புதன்கிழமை 24.10.2007 |
| திதி : திரயோதசி | பிற்பகல்: 02.31 |
| நட்சத்திரம் : | உத்தரட்டாதி |
| [illegible] | [illegible] |
| [illegible] | : 04.32 - 06.02 |
| ராகுகாலம் | : 12.02 - 01.32 |

## லயன்ஸ் கழக ஏற்பாட்டில் ஐ.நா. தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ். லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் ஐ.நா. தின நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். சிவராசா ஆகியோர் சிறப்புரையாற்றுவர். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அநுராதபுரம் விமானப்படைத் தளம் மீது தாக்குதல் நடத்தி களப்பலியான கரும்புலிகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன்.

# பாதுகாப்புச் செயலர், வான்படைத் தளபதி உடனடியாக இராஜினாமா செய்யவேண்டும்

## அநுராதபுர தாக்குதலை அடுத்து ஐ.தே.கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஒக். 23

''அநுராதபுரம் விமானப் படைத்தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் பிரகாரம் கணிசமான அளவு ஹெலிக்கொப்டர்களும், ஆகாய விமானங்களும் சேதமடைந்துள்ளன எனத் தகவல்கள் தெரிய வந்திருக்கின்றன. இதில் உயிரிழந்தோர் மற்றும் காயப்பட்டோரின் விவரங்கள் இதுவரை சரியாக வெளியாகவில்லை. இது தொடர்பான உண்மையான தகவல்களை அரசு நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

''இந்தத் தாக்குதலுக்கு உரிய முறையில் தடுப்பு நடவடிக்கை எடுக்கத் தவறிய பாதுகாப்புச் செயலாளரும், விமானப் படைத் தளபதியும் உடனடியாக இராஜினாமாச் செய்ய வேண்டும்.''

- இவ்வாறு ஐ.தே.கட்சி விடுத்துள்ள அவசர செய்தியில் வலியுறுத்தியுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

5ஆவது மஹிந்த அரசின் காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த ராஜராஜ சோழர் அனுராதபுரத்தில் தாக்குதல் நடத்தினார். அதன் பின்னர் முதல் தடவையாக அனுராதபுர யுத்த முகாம்களுக்குத் தாக்குதல் நடத்தப்பட்டது மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலேயாகும்.

இந்தத் தாக்குதலால் மரணமடைந்த படையினரின் குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளும் அதேவேளையில்,காயப்பட்டவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

இவ்வாறான தாக்குதலொன்றுக்கு முகம் கொடுப்பதற்கு அரசு ஆயத்தமாக இருந்ததா? என்ற பிரச்சினை நிச்சயமாக ஏற்படும். இந்தத் தாக்குதல் தொடர்பாக இதுவரையில் வெளியாகியுள்ள விவரங்களின்படி அரசு இவ்வாறான தாக்குதலொன்றுக்கு ஆயத்தமாக இருக்கவில்லையென்பது தெளிவாகின்றது.

அனுராதபுர வான் படைமுகாம் தொடர்பாக அரசு தான்தோன்றித் தனமாகவே நடந்துகொண்டது. இந்த முகாம் நகருக்கு மிக அருகில் அமைந்துள்ளமையால், முகாமின் பாதுகாப்புக்கு மாத்திரமல்லாது நகரின் பாதுகாப்புக்கும் மிகுந்த அச்சுறுத்தலுக்கு உள்ளது என நகர மக்களின் பெரும்பாலானோர் கருத்து தெரிவித்திருக்கின்றனர். ஆயினும், அரசு அது தொடர்பாகக் கவனம் எடுக்கவில்லை.

இதற்கு முன்னர் 'இந்திரா 2 ராடர்' அமைத்ததன் மூலம் முழுமையான வான் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என பல சந்தர்ப்பங்களில் தெரிவிக்கப்பட்டது. அதேபோலவே 'மிக் 27 'ரகத் தாக்குதல் விமானம் கொள்வனவு செய்யப்பட்டது, விடுதலைப் புலிகளின் வான்படைப் பலத்தை முறியடிப்பதற்கெனவும் அரசு உத்தியோகபூர்வமாகத் தெரிவித்திருந்தது.

இந்தத் தாக்குதலை முறியடிப்பதற்கு 'மிக் 27' விமானங்கள் பயன்படுத்தப்படவில்லை என்பது இப்போது தெரிகிறது. 'மிக் 27' விமானக் கொள்வனவில் பாரிய கமிஷன் தொகை கரீபியன் தீவுகளிலுள்ள சில இரகசியக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டது மாத்திரமே தெரியவந்தது.

இன்று இராணுவத் தளபதி தனிப்பட்ட விடுமுறையில் அமெரிக்கா சென்றுள்ளார். அரசினால் இராணுவத் தளபதி நாட்டைவிட்டுச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பது, கடற்படைத் தளபதி உத்தியோகபூர்வக் கடமைக்காக அமெரிக்கா சென்றிருக்கும் வேளையிலேயாகும். எனவே இந்தத் தாக்குதல் நடைபெற்றபோது படைத் தளபதிகள் இருவர் நாட்டில் இருக்கவில்லை - என்று உள்ளது.

## முல்லைத் தீவில் நேற்று அதிகாலை விமானத் தாக்குதல்

கொழும்பு, ஒக். 23

முல்லைத்தீவு, இரணைமடுப் பகுதியில் நேற்றுக் காலை 5.30 மணியளவில் 'கிபிர்' விமானங்கள் தாக்குதல்களை நடத்தின என்று ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

அநுராதபுரம் விமானத்தளம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய வேளை, விமானப்படையால் புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அரச தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(அ-1)

## கொடிகாமம், மீசாலையில் ஆயுதங்கள் மீட்பு

கொடிகாமம், மீசாலைப் பகுதிகளில் நேற்று முன்தினம் ஆயுதங்களைப் படையினர் மீட்டனர் என்று ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

கொடிகாமத்தில் கைவிடப் பட்ட வீடு ஒன்றில் இருந்து மூன்று கிரேனேட்டுக்கள், இரு சைனைட் குப்பிகள், ஒரு மைக்கிறோ பிஸ்ரல், ஒரு வரைபடம் உட்பட பல ஆயுத தளபாடங்களும் -

மீசாலையில் ஒரு கிரேனேட், ஒரு சைனைட் குப்பி, 22 சோடி பற்றிகள் உட்பட பல ஆயுத தளபாடங்களும் - மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## புலிகளின் படையில் சிறுவர்களும் களத்தில்

### படைத்தரப்பு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 23

தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணிகளில் சிறுவர்கள் இப்போதும் அங்கம் வகித்து சண்டைகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள் - என்று தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

அதற்கு அநுராதபுரம் விமானத் தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது எமக்கு கிடைத்த சடலங்கள் சான்று பகர்வனவாக உள்ளன -

அச்சடலங்களில் தற்கொலை அங்கிகளும் வெடிப் பொருள்களும் இருந்தன. இது மனித உரிமை மீறல்களுக்குரிய அப்பட்டமான உதாரணமாகும் - என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-1)



அநுராதபுரம் தாக்குதலில் தாம் கைப்பற்றிய விடுதலைப் புலிகளின் சடலங்கள் எனத் தெரிவித்து இராணுவத்தரப்பினர் வெளியிட்ட படங்களில் ஒன்று.

## 5 விமானங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வான்படையினர் தளத்தின் மீது குண்டுகளை வீசித் தாக்கியுள்ளனர்.

நேற்றைய தாக்குதலில் ஸ்ரீலங்கா வான்படைக்குச் சொந்தமான பின்வரும் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் வருமாறு:

- பயிற்சி விமானம் - 01
- எம்.ஐ. - 24 ரக ஹெலிகொப்டர்கள் - 02
- பி.ரி. 6 ரக விமானம் - 01
- பெல் 212 ரக ஹெலிகொப்டர் - 01
- வேவு விமானம் - 01
- செஸ்னா 768 விமானம் - 01
- கே. 8 ரக விமானம் - 01

கரும்புலி அணியினரின் தாக்குதலுக்கு உதவியாக தமிழீழ வான்படையினரும் அனுராதபுரம் தளம் மீது தாக்குதல் நடத்திவிட்டு வெற்றிகரமாகத் தளம் திரும்பியிருப்பதாக வான் புலிகளின் தளபதி தெரிவித்துள்ளார்.

என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## அதிர்ச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்களை நடத்தி ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் படைத்தரப்புக்கு இதுபோன்ற அதிர்ச்சிகள் இன்னும் காத்திருக்கின்றன'' - என்றார் அவர்.

(அ-சி)

## துரத்திய ஹெலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை தேடுதல் மேற் கொண்ட படையினர் உயிரிழந்த தமது சகாக்களின் சடலங்களையும், ஹெலியின் பாகங்களையும் மீட்டனர்.

இயந்திரக் கோளாறு காரணமாகவே இந்த ஹெலிக்கொப் டர் வீழ்ந்து நொறுங்கியதாக விமானப்படைப் பேச்சாளர் அஜந்த டீ சில்வா தெரிவித்தார். (அ-சி)

## 4 வானூர்திகளே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருசாராருக்கும் இடையில் நடந்த நீண்ட - பலமணி நேர மோதலில் 9 விமானப்படையினர் உயிரிழந்தனர். 20 பேர் படுகாயமடைந்தனர்.

''இதேவேளை, சிலமணி நேரங்களில் புறப்பட்டு வந்த புலிகளின் இலகு ரக விமானங்கள் இரண்டும் விமானப்படைத் தளம் மீது இரு குண்டுகளை வீசிவிட்டுச் சென்றுவிட்டன.

இதற்கும் அதற்கும் தொடர்பில்லை

இந்நிலையில் புலிகளைத் தேடி அழிக்கும் நோக்கில் வந்த எமது ஹெலிக்கொப்டர் ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக மிகிந்தலையில் தரையிறங்க முயற்சித்ததில் விபத்துக்குள்ளாகி வீழ்ந்து நொறுங்கியது. இச்சம்பவத்தில் விமானி, உதவி விமானி மற்றும் விமானப்படையினர் என மொத்தம் 4பேர் பலியாகினர். இந்தச் சம்பவத்துக்கும் புலிகளின் தாக்குதலுக்கும் தொடர்பில்லை. தாக்குதல் ஓய்ந்தபிறகு விமானப்படைத் தளப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது 20 புலிகளின் சடலங்கள் மீட்கப்பட்டன' இவ்வாறு அரசுத் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## கிளாலி, முகமாலையில் மோதல்கள்

கொழும்பு, ஒக். 23

கிளாலி முன்னணி முன்னரங்க நிலைகளில் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினரின் தாக்குதுலில் விடுதலைப் புலிகளின் மூன்று 'பங்கர்'கள் அழிக்கப்பட்டதாக படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

அதேவேளை -

முகமாலை முன்னரங்க நிலைகள் மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டது என்றும் படையினர் சிறு காயங்களுக்கு ஆளானார்கள் என்றும் ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (அ-1)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சிவபாதவிருதயர்

(ஓய்வுபெற்ற வடவலய உதவி பொது முகாமையாளர், மக்கள் வங்கி)



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் தற் பொழுது தெஹிவளையில் வசித்தவருமாகிய ஓய்வுபெற்ற மக்கள் வங்கி உதவிப்பொது முகாமையாளரும் (வடவலயம்), வவுனியா சாயிசமித்தி மனித மேம்பாட்டுக் கல்வி இணைப்பாளருமான கணபதிப்பிள்ளை சிவபாதவிருதயர் 19.10.2007 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கண்மணி தம்பதிகளின் புத்திரனும், கந்தசாமி-மனோண்மணி தம்பதிகளின் மருமகனும், பிரேமலதாவின் அன்புக் கணவரும், நிருத்தன் (பொறியியலாளர்), சம்பந்தன் (வெஸ்ட் மினிஸ்ரர் பல்கலைக்கழகம், லண்டன் ), அபிராமி ஆகியோரின் தந்தையாரும், சிவஞானாம்பிகை, சிவகடாட்சம் (கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற சிவகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டு, இன்று (23.10.2007) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 24, பழைய வைத்தியா வீதி,*
*வைத்தியா வீதி, தெஹிவளை.*
*T.P.: 011 2738572*

தகவல்:
நிருத்தன் (மகன்)


கணனி உலகிற்குச் செல்ல ஓர் அரிய சந்தர்ப்பம்...

Intel celeron D 3.06 Ghz, AsRock / Foxconn Mother board, 256 Memory, 40Gb HDD, Combo, ATX Case with SMPS 15 CRT Monitor Keyboard, Mouse, Speaker 43,800/-

Intel pentium4 3.0 Ghz, AsRock / Foxconn Mother board, 512 DDR II, 80Gb HDD, Combo, ATX Case with SMPS 15" CRT Monitor Keyboard, Mouse. 52,200/-

FLASH FREE

MOTHER BOARD
intel Original
AsRock
Asus
Foxconn
AsRock 478

MONITOR
17" CTR 17,500/-
17" LCD View Sonic 26, 000/-

Sony DVD-RW, UPS

Display Device

HARD DISKS
40 Gb Sata
80 Gb Sata
160 Gb Sata

MEMORIES
256Mb DDR
512Mb DDR
1 Gb DDR

இலங்கை hp முகவரினால் அங்கீகரிக்கப்பட்ட Toner Cartridge Ribbon

Printer, Scanner

திருமுருகன் கொம்நெற்
259 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835
(ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.